රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி / Telephone: (94) 011- 2694560
ෆැක්ස් / தொலைநகல் / Fax: (94) 011- 2692254
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: dgcs@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Web Site: www.pubad.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/04
ඔබේ අංකය / Your No:
දිනය / திகதி / Date: 2021.12.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்டுள்ள/ உள்வாங்கப்படவுள்ள உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் தடை தாண்டல் நிவாரணம் வழங்குதல்</u>**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 14 இன் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவையில் உள்வாங்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக.

02. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்புகளை பரிசோதித்த போது, பின்வரும் வகைகளை சேர்ந்த உத்தியோகத்தர்கள் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை தொடர்பில் நிவாரணம் கோரி கோரிக்கைகளை முன்வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

முன்னைய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் தடை தாண்டல் பரீட்சை பற்றி குறிப்பிடப்படாததால், எந்த வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையிலும் சித்தியடையாத உத்தியோகத்தர்கள்.

I. முன்னைய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை உரிய திகதியில் முழுமைப்படுத்தத் தவறியதன் பேரில் நிவாரணம் கோரி விண்ணப்பித்த உத்தியோகத்தர்கள்.

II. 2011.08.01 ஆந் திகதிக்குப் பின்னர் மற்றும் உள்வாங்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்படுவதற்கு முன், முன்னைய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்திபெற்ற உத்தியோகத்தர்கள்.

III. முன்னைய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறாத காரணத்தால் முன்னைய பதவியில் சேவை நிரந்தரமாக்கப்படாத மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்ட பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெற்ற உத்தியோகத்தர்கள்.

IV. 2011.08.01 முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இல் உள்வாங்கப்பட்டு அன்றிலிருந்து 3 வருடங்கள் கடந்த பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் இரண்டாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்கள்.

03. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை நிவாரணம் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள் தொடர்பாக பொது சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், பொது சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் 2021.08.13ஆந் திகதியிடப்பட்ட இல. PSC/APP/04/2021 மற்றும் 2020.10.23 திகதியிட்ட PSC/APP/4/2/2016 கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட பொது சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானங்களின் படி, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்டுள்ள/ உள்வாங்கப்படவுள்ள உத்தியோகத்தர்களின் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை தொடர்பாக நிவாரணம் பெறும் விதம் இணைப்பு 01இன் மூலம் காட்டப்பட்டுள்ளதுடன், அது பற்றி உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு கருணையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

04. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்படும் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் நாளான 2011.08.01ஆந் திகதிக்கு முன்னர் கடமையாற்றிய முன்னைய பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் உரிய கால எல்லைக்குள் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பதுடன், ஒரு வருடத்திற்கு ஒருமுறை பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் உரிய பரீட்சை தவணைகள் கணக்கிடப்படுவதாகவும் பொது சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் PSC/APP/04/2021 ஆம் இலக்க மற்றும் 2021.08.13 திகதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

05. மேலும், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி, முன்னைய சேவையில் தரம் III பதவியிலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II பதவிக்கு 2011.08.01ஆந் திகதி முதல் உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், உள்வாங்கப்படும் கடிதம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 வருடங்களுக்குள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை முழுமைப்படுத்த வேண்டும் என்பதுடன், வருடத்திற்கு இரண்டு பரீட்சை தவணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பரீட்சை தவணைகள் கணக்கிடப்படுகிறது. இதுவரை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கு இரண்டு வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைகள் மட்டுமே (2018.04.21 மற்றும் 2020.01.19 ஆகிய திகதிகளில்) நடாத்தப்பட்டுள்ளன என்பதாலும், அப்பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதாலும், பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03/2016 இன் பந்தி 4 இன் தொடர் இல. 4இன் பிரகாரம் இரண்டாம் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இல் உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வருடாந்த சம்பள அதிகரிப்பை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

i) வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை பெறுபேறுகள் உரிய படிவத்தின் மூலம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டிருத்தல்
ii) உத்தியோகத்தரின் செயலாற்றுகை அறிக்கைகள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு, மதிப்பீட்டாளர்களினால் முறையாக உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட்டிருத்தல்.
iii) வருடாந்த சம்பள உயர்வை வழங்குவதுடன் தொடர்புடைய மற்ற அனைத்து தேவைகளும் முறையாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.

06. மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II மற்றும் தரம் I க்கான பதவி உயர்வுக்கான தகைமைகளை பூர்த்தி செய்ததன் அடிப்படையில் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு திகதியைக் கணக்கிடுவதில் 2020.01.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 மற்றும் அதன் துணைச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்வதற்கு நிவாரணம் வழங்குதல்.**

**1வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை**

1. முன்னைய பதவியுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை தொடர்பில் குறிப்பிடப்படாத உத்தியோகத்தர்களுக்கு 1ஆவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்வதற்கு நிவாரணம் வழங்குதல்.

| நிவாரணம் வழங்கப்படுவதற்கான உத்தியோகத்தர் தொகுதி | | நிவாரணம் |
|---|---|---|
| **i.** | முன்னைய பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை பற்றி குறிப்பிடப்படாத, நியமனம் நிரந்தரமாக்கப்படாத உத்தியோகத்தர்கள். | முன்னைய பதவியில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறாத உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பின் 10வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தரம் III இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில், உள்ளீர்க்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பதுடன், அக்காலப்பகுதியில் ஒரு வருடத்திற்கு இரண்டு பரீட்சை தவணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய பரீட்சை தவணைகள் கணக்கிடப்படும். |
| **ii.** | முன்னைய பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் (V) வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை பற்றி குறிப்பிடப்படாத, எனினும் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள். | |

| | |
|---|---|
| **iii நியமனத்தை நிரந்தரமாக்குவது தொடர்பான விடயங்கள்** | சேவையில் நிரந்தரமாக்குவது தொடர்பான அனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ள முன்னைய பதவியில் நிரந்தரமாக்கப்படாத உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்குவது தொடர்பாக திணைக்களத் தலைவர்கள் தமது பரிந்துரையை அனுப்பும் போது, உத்தியோகத்தரின் நியமனத் திகதியிலிருந்து 2009.04.02 வரையிலான பரிந்துரையை தாபன விதிக்கோவையின் படியும், 2009.04.02 முதல் தகுதிகாண் காலம் முடியும் வரையிலான பரிந்துரையை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளின்படியும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| **iv. தரநிலை பதவி உயர்வு தொடர்பான விடயங்கள்** | அ) நிவாரணக் காலத்தில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் உத்தியோகத்தர்களின் வருடாந்த சம்பள உயர்வுகள் பிற்போடப்படும்.<br><br>ஆ) நிவாரணக் காலத்தில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெற்றுள்ள உத்தியோகத்தர்கள், ஏனைய உரிய தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால் உரிய திகதிக்கு வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக கருதி முன்னைய சேவையில் உள்ளீர்க்கப்பட்டு 10 ஆண்டுகள் செயற்திறமான சேவைக் காலத்தை நிறைவு செய்யும் திகதியிலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு பெறுவார்கள். |

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்வதற்கு நிவாரணம் வழங்குதல்.**

**1ஆவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை**

| | | |
|---|---|---|
| 2. முன்னைய பதவியுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்யும் அடிப்படையில் நிவாரணம் வழங்குதல். | | |
| **நிவாரணம் வழங்கப்படுவதற்கான உத்தியோகத்தர் தொகுதி** | | **நிவாரணம்** |
| **i.** | முன்னைய பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை 2011.08.01 ஆந் திகதிக்குப் பின்னர் அல்லது உள்வாங்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்படுவதற்கு முன், பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள். | உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய அவசியமில்லை.<br><br>மேலும், அந்த உத்தியோகத்தர் ஆஜராக முடிந்த முந்தைய பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையை கருத்திற் கொண்டு, அதன் அடிப்படையில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு உரிய தவணைகளின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது. |
| **ii** | முன்னைய பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தயடையாத அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் | உத்தியோகத்தருக்கு ஆஜராக முடியுமாகவிருந்த முன்னைய பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையையும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு அதன் அடிப்படையில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு உரிய தவணைகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். |

| | | |
|---|---|---|
| | சித்தியடையடைந்த உத்தியோகத்தர்கள். | |
| **iii நியமனத்தை நிரந்தரமாக்குவது தொடர்பான விடயங்கள்** | முன்னைய பதவியில் நிரந்தரமாக்கப்படாத உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்குவது தொடர்பாக திணைக்களத் தலைவர்கள் தமது பரிந்துரையை அனுப்பும் போது உத்தியோகத்தரின் நியமனத் திகதியிலிருந்து 2009.04.02 வரையிலான பரிந்துரையை தாபன விதிக்கோவையின் படியும், 2009.04.02 முதல் தகுதிகாண் காலம் முடியும் வரையிலான பரிந்துரையை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளின்படியும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். | |
| **iv. தரநிலை பதவி உயர்வு தொடர்பான விடயங்கள்** | அ) உரிய தவணைக் காலத்தில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் உத்தியோகத்தர்களின் வருடாந்த சம்பள உயர்வு பிற்போடப்படும்.<br><br>ஆ) உரிய தவணைக் காலத்தில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெற்றுள்ள உத்தியோகத்தர்கள், ஏனைய உரிய தகைமைகளை பூர்த்தி செய்திருந்ததால் உரிய திகதிக்கு வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக கருதி முன்னைய சேவையில் உள்ளீர்க்கப்பட்டு 10 ஆண்டுகள் செயற்திறமான சேவைக் காலத்தை நிறைவு செய்யும் திகதியிலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு பெறுவார்கள். | |

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்வதற்கு நிவாரணம் வழங்குதல்.**

**2ஆவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை**

3. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான 2 வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கு நிவாரணம் வழங்குதல்.

| **நிவாரணம் வழங்கப்படுவதற்கான உத்தியோகத்தர் தொகுதி** | | **நிவாரணம்** |
|---|---|---|
| **I** | முன்னைய பதவியில்/சேவையில் தரம் II இல் பணியாற்றி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II க்கு உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள். | முன்னைய பதவியில்/சேவையில் தரம் II இல் உள்ள பதவியொன்றில்/ சேவையொன்றில் பணியாற்றி 2011.08.01 ஆந் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II க்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஆஜராவதற்கு முடியுமாகவிருந்த, முன்னைய பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையையும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II க்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு, அதன் அடிப்படையில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு உரிய தவணைகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.<br>உள்ளீர்க்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்பட்ட திகதி வரையிலான காலப்பகுதியில் முன்னைய பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2 வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்திருந்தால், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டிய அவசியமில்லை. |
| **ii** | முன்னைய பதவியில்/சேவையில் தரம் III இல் பணியாற்றி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II க்கு உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள். | முன்னைய பதவியில்/சேவையில் தரம் III இல் உள்ள பதவியொன்றில்/ சேவையொன்றில் பணியாற்றி 2011.08.01 ஆந் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II க்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு 2வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்வதற்கு உள்ளீர்க்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் பூர்த்திசெய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன், உள்ளீர்க்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து நடத்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் 2 வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு அதன் அடிப்படையில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தவணைகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.<br><br>உள்ளீர்க்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்பட்ட திகதி வரையிலான காலப்பகுதியில் முன்னைய பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2 வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்திருந்தால், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டிய அவசியமில்லை. |

| | | |
|---|---|---|
| **iii** | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் III க்கு உள்ளீர்க்கப்பட்டு, 2011.08.01 ஆந் திகதிக்கு பிந்திய நாள் முதல் அமுலுக்கு வரும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் IIக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் | முன்னைய பதவியில்/சேவையில் தரம் III இல் உள்ள உத்தியோகத்தர்கள் 2011.08.01 ஆந் திகதிக்குப் பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II க்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு 2வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை முழுமைப்படுத்துவதற்கு உள்ளீர்க்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்பட்ட தியிலிருந்து 3 வருடங்களுக்குள் உரிய வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு ஆஜராவதற்கு சந்தர்ப்பம் இருந்த தரம் IIக்கான 2வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையை கருத்திற் கொண்டு அதன் அடிப்படையில் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய பரீட்சை தவணைகள் கணக்கிடப்படும்.<br><br>உள்ளீர்க்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்பட்ட திகதி வரையிலான காலப்பகுதியில் முன்னைய பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் / நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2 வது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்திருந்தால், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டிய அவசியமில்லை. |
| **iii. தரநிலை பதவி உயர்வு தொடர்பான விடயங்கள்** | a) உரிய காலத்தினுள் வினைத்திறன் தடைத்தாண்டல் பரிட்சையில் சித்தி பெறத் தவறும் உத்தியோகத்தர்களின் வருடாந்த சம்பள உயர்வு பிற்போரப்படும்.<br>b) உரிய காலப் பகுதியினுள் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெற்றுள்ள உத்தியோகத்தர்கள், ஏனைய உரிய தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால் உரிய திகதிக்கு வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக கருதி முன்னைய சேவையில் உள்ளீர்க்கப்பட்டு 10 ஆண்டுகள் செயற்திறமான சேவைக் காலத்தை நிறைவு செய்யும் திகதியிலிருந்து தரம் I க்கு பதவி உயர்வு பெறுவார்கள். | |